முல்லைப் பெரியாறு அணையை கட்டி தமிழ்நாட்டுக்கு நீர் ஆதாரம் செய்து கொடுத்த வள்ளல் பென்னிகுயிக் அவர்களின் 185வது பிறந்தநாள் விழாவில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் தையல் இயந்திரம் வழங்கி சிறப்பித்தார். இதில் பேரூராட்சி மன்ற தலைவர் எம்.அப்துல் சலாம், நிகழ்ச்சி ஏற்பாடு மாவட்ட விவசாய அணி தலைவர் பாபு ஜீவானந்தம் நகர கழக செயலாளர் LAM.நைனா முகமது விக்கிரவாண்டி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ச.பாலாஜி விசிக நகர செயலாளர் சந்துரு, மாவட்டப் பிரதிநிதி திலகர்,பேரூர் நிர்வாகிகள் நகரப் பொருளாளர் பாபுஜி பாண்டியன் நகர துணை செயலாளர்கள் கே.பிரசாத், சித்ரா கோவிந்தன்,SRS. சுரேஷ்குமார் ,நகர இளைஞரணி அமைப்பாளர் R.கார்த்திக் வார்டு செயலாளர்கள் இம்ரான் கான் ராமலிங்கம் மாயவன் செல்வம் எஸ் எம் சிவா யுவராஜ் நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாபுஜி யுவராஜ் ,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கனகா சக்திவேல், சர்க்கார் பாபு ,ஆனந்தி, சுதா பாக்யராஜ் ,வெண்ணிலா காத்தவராயன், முகமது சைபுல்லா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கருநாடக மாநிலத்தில் பதினெட்டு ஆண்டுகள் துணியால் மூடிவைக்கப்பட்டிருந்த அய்யன் திருவள்ளுவர் அவர்களின் திருவுருவச் சிலையை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன் நினைவாக திருவள்ளுவர் சிலைக்கு திருவள்ளுவர் தினமான ஜனவரி 16ஆம் தேதி தொடர்ந்து விழா நடைபெற்று வருகின்றது. அதற்கு பெங்களூர் தமிழ்ச் சங்கம், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், அமைப்புகள் மாலை அணிவித்து வருகின்றனர். அதன் அடிப்படையில் முன்னுரிமை பெற்ற முதல் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ந.இராமசாமி, போர் முரசு கதிரவன், சற்குணா, இ.மதி ஆகியோர் மாலை அணிவிக்கும் காட்சி. உடன் கழகத் தோழர்கள் உள்ளனர்.

மாற்றுக் கட்சியினர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

கிருஷ்ணகிரியில் ரூ.1 கோடியே 30 லட்சத்தில் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள்!

வாக்குச்சாவடி முன்கள பணியாளர்களுக்கு - அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜன. 19 - கிருஷ்ணகிரியில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்ற மாற்றுக் கட்சியிலிருந்து ஆயிரம் பேர் கழகத்தில் இணைந்தனர். வாக்குசாவடி முன்கள பணியாளர்கள் 200 பெண்களுக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாற்றுக் கட்சியினர் 1,000 பேர் திமுகவில் இணையும் இணைப்பு விழா மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் காவேரிப்பட்டணம் ஒன்றியம், சாப்பரம் கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர்தர்மன் ஏற்பாட்டில் மாவட்ட முழுவதும் இருந்து அதிமுக, பாஜக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்த கட்சிகளில் இருந்து விலகி கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில், வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குசாவடி முன்களப் பணியாளர்களாக பணியாற்றி வரும் (BLA, BDA) வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடியின் டிஜிட்டல் முகவர்கள் 200 பெண்களுக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல் ஏ ஏற்பாட்டில் மாண்புமிகு அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநிலவர்த்தக அணிதுணை செயலாளர்கள் சீனிவாசன் , அன்பரசன் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் , கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் ,வேல்மணி ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன் ,அறிஞர், நரசிம்மன், குண. வசந்தரசு , எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், சாஜித், பார்த்திபன் மற்றும் அணிகளை அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி வடக்குத்து ஊராட்சி ஸ்ரீராம் நகர், பூங்காவில் திராவிட சமத்துவ பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு சபா.இராசேந்திரன் பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவித்தார். நிகழ்ச்சியில் பா.துரைசாமி, குணசேகரன், ஆர்.சந்தோஷ், வி.குருநாதன், சிவந்தான்செட்டி, அவைத்தலைவர் வீர.ராமச்சந்திரன், அப்துல் மஜீத் , ஆர்.சீனிவாசன், ஆனந்தஜோதி, ஏழுமலை, பால சண்முகானந்தம், இராம.கருப்பன், தமிழ்ச்செல்வன், பிச்சையா, நடராஜன், சுப்பையா, மணிகண்டன், ராஜா, பிரபு, சிவசங்கரவேல், அருள், ஜே.சடையப்பன், சிவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட

மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர்கள் எஸ்,ரகுபதி – சிவ.வீ,மெய்யநாதன் சிறப்புரை! கே,கே,செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை,ஜன.19- வெல்லும் தமிழ்ப் பெண்கள் டொல்டா மண்டல திமுக மகளிர் அணி மாநாடு வரும் 26/1/2026 அன்று தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெறுவதை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் கனிம வளத் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்பில், பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

வேலூர் மாநகர தி.மு.க. இலக்கிய அணிசார்பில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அவரது சிலைக்கு மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசுகி மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் மாவட்ட,மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாநகர இலக்கிய அணியினர் செய்து இருந்தனர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன்,

கழக மகளிர் அணி துணை செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிகுமார், சேலம் முன்னாள் மேயரும் கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளருமான ரேகா பிரியதர்ஷினி, கழக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி ஆகியோர் பங்கேற்று அலோசனைகளை வழங்கினர். நிகழ்வில்

டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், சுப.சரவணன், கே.ஆர்.என். போஸ், டாக்டர் அண்ணாமலை ரகுபதி, அரு.வீரமணி, பி.ராஜேஸ்வரி, ஞான.இளங்கோவன், அடைக்கலம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், அபிதாஹீர், மு.க.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் மணவழகன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், மாநில, மாவட்ட, மாநகர ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் ,வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசுமணி மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.பிரபா தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சையது அலி பாத்திமா உள்ளிட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்

கே.மாரிமுத்து தாயார் தங்கச்சி அம்மாள் மறைவு!

பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜன19. திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினரும், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவருமான கே. மாரிமுத்து அவர்களின் தாயார் தங்கச்சிஅம்மாள் அவர்கள் 18.01.2026 அதிகாலை வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவின் தகவலறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சியின் நிர்வாகிகளும் தங்கள் இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

மறைந்த தங்கச்சி அம்மையாரின் இறுதி ஊர்வலம் கோட்டூர் ஒன்றியம் காடுவாக்குடி கிராமம் அவரது இல்லத்திலிருந்து நேற்று (ஞாயிற்று கிழமை) புறப்பட்டு இறுதி அடக்கம் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

த. முத்துராமலிங்கம்
சனவரி 19 (2019)

இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி. மன்னார்
சனவரி 19 (1991)



கழகம் தொடங்கியபோதே உறுப்பினராகி பணியாற்றியவர்.

முதன்முதலாக தான் வசிக்கும் வடபெரும்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தை தொடங்கி அதன் செயலாளராக பொறுப்பு வகித்து தொடர்ந்து இருபது ஆண்டுகள் கிளைச் செயலாளர் பொறுப்பு வகித்தவர்.

வடபெரும்பாக்கம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து மக்கள் பணியாற்றியவர்.

1966ல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.